**சுருக்கம்**

தொழில் நல்லுறவு பரிசுக்குழு – 2021 முதல் 2024 வரையிலான ஆண்டுகளுக்கு தொழில் நல்லுறவை பேணிப்பாதுகாக்கும் பணியில் சிறந்து விளங்கும் நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்களை தேர்வு செய்தல் – தொழில் நல்லுறவு பரிசு திட்டக்குழு திருத்தி அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(டி2)த் துறை**

அரசாணை (நிலை) எண். 96

நாள்: 04.09.2025
விசுவாவசு, ஆவணி – 19
திருவள்ளுவர் ஆண்டு 2056

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை எண்.717, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 21.08.1975.
2. அரசாணை எண்.943, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 18.10.1976.
3. தொழிலாளர் ஆணையரின் கடித எண். டி2/15568/2025, நாள் 08.07.2025.

-----

**ஆணை:**

தமிழ்நாடு அரசு, தொழில் நிறுவனங்கள் மற்றும் பணியாளர்களிடையே தொழில் நல்லுறவை மேம்படுத்தும் நோக்கில் "தொழில் நல்லுறவை பேணிப்பாதுகாக்கும் பணியில்" சிறந்து விளங்கும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்க அமைப்புகளுக்குப் பரிசுகள் வழங்கும் வகையில் "தொழில் நல்லுறவு பரிசுத் திட்டம்" என்ற திட்டத்தை 1975-ம் ஆண்டு துவங்கி நாளது தேதி வரை செயல்படுத்திவருகிறது. இத்திட்டம் படிக்கப்பட்ட அரசாணை ஒன்றின் மூலம் துவங்கப்பட்டு, இதனை மிகச்சிறப்பாக செயல்படுத்துவதற்காக படிக்கப்பட்ட அரசாணை இரண்டின் மூலம் முதன்முதலாக தொழில் நல்லுறவு பரிசுத் திட்டக்குழு ஒன்றை அரசு அமைத்தது.

2. தொழில் நிறுவனத்தில் வேலை நிறுத்தம், குறுக்கீடு இல்லா பேச்சுவார்த்தை, தொழில் அமைதி, உற்பத்தி வளர்ச்சி திறன் அதிகரிப்பு, வேலையளிப்போர்/ தொழிற்சங்க அமைப்புகளின் ஒத்துழைப்பு, தொழிலாளர்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சிறப்பாக செயல்படும் வேலையளிப்போர் மற்றும் தொழிற்சங்க அமைப்புகளை இனம் கண்டு, அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டிற்கும்

(த.பி.பா)

தொழில் நல்லுறவு பரிசை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பரிசு திட்டக்குழு கீழ்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| 1. | ஓய்வு பெற்ற உயர்நிதிமன்ற நீதிபதி | : தலைவர் (அரசால் நியமிக்கப்படுபவர்) |
| 2. | தொழிலாளர் தனி இணை ஆணையர் | : செயலாளர் |
| 3. | வேலையளிப்போர் அமைப்புகளிலிருந்து | : 4 உறுப்பினர்கள் |
| 4. | தொழிற்சங்க அமைப்புகளிலிருந்து | : 4 உறுப்பினர்கள் |

இக்குழு ஒவ்வொரு ஆண்டும் வேலையளிப்போர் மற்றும் தொழிற்சங்க அமைப்புகளிடமிருந்து பெறப்படும் பரிசுக்குரிய விண்ணப்பங்களை பரிசீலித்து ஒவ்வொரு ஆண்டிற்கும் முதல் பரிசு மற்றும் இரண்டாவது பரிசு என தலா 8 வேலையளிப்போர் மற்றும் 8 தொழிற்சங்க அமைப்புகளை தேர்வு செய்து பரிசுகளை வழங்க அரசுக்கு உரிய பரிந்துரைகளை வழங்கி வருகிறது.

3. பரிசுகள் வழங்க, தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சங்க அமைப்புகள் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கேற்ப பின்வரும் 4 பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றனர்:

| | |
|---|---|
| 1 முதல் 100 வரை | 'அ' பிரிவு |
| 101 முதல் 500 வரை | 'ஆ' பிரிவு |
| 501 முதல் 1000 வரை | 'இ' பிரிவு |
| 1000க்கு மேல் | 'ஈ' பிரிவு |

4. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தொழிலாளர் ஆணையரின் செயற்குறிப்பில், தொழில் நல்லுறவு பரிசுத்திட்டத்தினை செயல்படுத்திட, கடந்த 2021 முதல் 2024 ஆகிய நான்கு ஆண்டுகளுக்கான விண்ணப்பங்களை பெற்று பரிசீலிக்கும் பொருட்டு, தற்போதுள்ள தொழில் நல்லுறவு பரிசுக்குழுவினை திருத்தி அமைத்து ஆணைகள் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5. தொழிலாளர் ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்த பின்னர், 2021 முதல் 2024 வரையிலான நான்கு ஆண்டுகளுக்கு தொழில் நல்லுறவு பரிசுத் திட்டத்தின் கீழ் தகுதியான நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்களை

தேர்வு செய்யும் பொருட்டு தொழில் நல்லுறவு பரிசுக் குழுவினை கீழ்க்கண்டவாறு திருத்தி அமைத்து ஆணையிடுகிறது:-

1. **தலைவர்:** ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதிபதி திரு.V.சிவஞானம்.

2. **செயலாளர்:** தொழிலாளர் தனி இணை ஆணையர்.

3. **உறுப்பினர்கள்:**

(i.) **வேலையளிப்போர் தரப்பு பிரதிநிதிகள்:**
(கீழ்க்கண்ட அமைப்புகளிலிருந்து தலா ஒரு பிரதிநிதி)

| வ.எண் | வேலையளிப்போர் அமைப்புகளின் பெயர் |
|---|---|
| 1. | தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பு (EFSI) |
| 2. | தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம் (SIMA) |
| 3. | அனைத்திந்திய உற்பத்தியாளர்கள் அமைப்பு (AIMO) |
| 4. | கோவை மாவட்ட சிறு தொழில்கள் சங்கம் (CODISSIA) |

(II) **தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகள்:**
(கீழ்க்கண்ட தொழிலாளர் சங்கங்களிடமிருந்து தலா ஒரு பிரதிநிதி)

| வ.எண் | தொழிற்சங்கங்களின் பெயர் |
|---|---|
| 1. | தொழிலாளர் முன்னேற்ற சங்கப்பேரவை (LPF) |
| 2. | இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (INTUC) |
| 3. | அனைத்திந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC) |
| 4. | இந்திய தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பு (CITU) |

6. தொழில் நல்லுறவு பரிசு திட்டக் குழுவின் உறுப்பினர்களுக்கான பயணப்படி மற்றும் தினசரிப்படி ஆகியவற்றின் நோக்கத்திற்காக இக்குழு முதல் தரக் குழுவாகக் கருதப்படும். தொழில் நல்லுறவு பரிசு திட்டக்குழுவின் தலைவர் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு இருக்கும்.

7. இக்குழுவிற்கான செலவினம் கீழ்க்கண்ட தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2230 தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டுத் துறை – 01 தொழிலாளர் – 001 நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் – மாநில செலவினங்கள் ஏஏ. தலைமையிட பணியாளர்கள் தொழிலாளர் ஆணையர் – 304, பயணச் செலவினம் – 01 சுற்றுப் பயணப் படிகள்".
(த.தொ.கு. "2230-01-001-AA-30401")

8. இக்குழுவின் செயலாளராக இருக்கும் தொழிலாளர் தனி இணை ஆணையர், இக்குழுவின் உறுப்பினர்களின் பயணப்படிகளுக்கான பட்டியலில் மேலொப்பமிட அதிகாரம் பெற்றவராவார்.

9. தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் உள்ள நிர்வாக அலுவலர் (குறைந்தபட்ச ஊதியம்), தொகையை பெற்று வழங்குவதற்கு அதிகாரம் பெற்றவராவார்.

10. இவ்வாணைக்கு, அரசாணை (நிலை) எண்.1177, நிதித்துறை, நாள்.09.09.1988–ன்படி நிதித்துறையின் ஒப்புதல் தேவையில்லை.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கொ. வீர ராகவ ராவ்**
**அரசுச் செயலாளர்**

<u>பெறுநர்</u>

மாண்புமிகு திரு.நீதிபதி V.சிவஞானம் (ஓய்வு)
எண். NCB – 12A, பசுமைவழிச் சாலை,
ஆர்.ஏ.புரம், சென்னை – 600 028.
தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பு (EFSI)
தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம் (SIMA)
அனைத்திந்திய உற்பத்தியாளர்கள் அமைப்பு (AIMO)
கோவை மாவட்ட சிறு தொழில்கள் சங்கம் (CODISSIA)
தொழிலாளர் முன்னேற்ற சங்கப்பேரவை (LPF)
இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (INTUC)
அனைத்திந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC)
இந்திய தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பு (CITU)
தொழிலாளர் ஆணையர், சென்னை – 600 006.

} தொழிலாளர் ஆணையர் வழியாக

<u>நகல்</u>

மாநிலக் கணக்காயர், சென்னை – 600 018.
மாநிலக் கணக்காயர், (தணிக்கை), சென்னை – 600 009.
சம்பளக் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 600 035.
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
அரசு செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.
துணைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (அநமு II –2) துறை, சென்னை–600 009.
சுத்த நகல் / இருப்பு கோப்பு (கோ.எண்.efile.2418/டி2/2025)

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**